Regd.with the Registrar of Newspapers for India.No.TN TAM /2007/22101
Regd.TN/CC(S)Dn/326/10-12

இப்பொழுது தியானித்துக்கொண்டிருப்பது . .

வேத ஆராய்ச்சி பாடங்கள் ஜெபம்

வாரந்தோறும் – திங்கள் கிழமைகளில்

மாலை - 6.30 மணி முதல் 8.00 மணி வரை

இடம்: ஏ-4, டேஜு ப்ளாஸா, 2, தெற்கு அவென்யூ,

ஸ்ரீநகர் காலனி, சைதாப்பேட்டை,

சென்னை - 600 015.

( சைதாப்பேட்டை கோர்ட் அருகில் )







Owned and Published by: S. Paulraj Kennedy from A-1, Deju Plaza, No. 2, South Avenue, Srinagar Colony, Saidapet, Chennai - 600 015. Phone: +91 - 44 - 22353500
Printed by: Jolly Peter at Sharp Offset Printers, New No. 96, Old No. 223, Peters Road, Royapettah, Chennai - 600 014. Phone: +91 - 44 - 28480607
Editor: Nija Kennedy

VOL . 4 ISSUE . 7 தனிப்பிரதி ரூ 20/= பிப்ரவரி 2011

# இனி எக்காளம்



மனுஷகுமாரன் வரும் நாளையாவது நாழிகையையாவது
நீங்கள் அறியாதிருக்கிறபடியால் விழித்திருங்கள்

– மத்தேயு 25:13

# பரலோக ராஜ்யம்

– ரீஜா கென்னடி

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர சகோதரிகளே, ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குக் கிருபையும், சமாதானமும் உண்டாவதாக. கடந்த இதழிலே தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து பார்த்தோம். இந்த மாதமும் தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்தும், அதைக் குறித்த சில உவமைகளையும் பார்க்கலாம். இயேசு கிறிஸ்து ஜனங்கள் எளிதாக புரிந்து கொள்ளும் வகையில் சிறுகதைகளின் மூலமாக அறிவுரை வழங்கினார். உவமைகள் மூலம் ஜனங்கள் நன்கு அறிந்த நிகழ்ச்சியை வைத்து அறியாதவற்றை ஒப்பிட்டு சொன்னார். இதனால் ஜனங்கள் எளிதாக புரிந்து கொள்ள முடிந்தது.

**பூமியின் எல்லையெங்குமுள்ளவர்களே, என்னை (இயேசு கிறிஸ்துவை) நோக்கிப்பாருங்கள்; அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள்; நானே தேவன், வேறொருவரும் இல்லை** (ஏசாயா 45:22). இயேசு கிறிஸ்து நம் ஒவ்வொருவரையும் பார்த்துச் சொல்லுகிறார்: நான் ஒருவரே தேவன் என்றும் அவரைப் பின்பற்றுகிறவர்களோ அழிவிலிருந்து காப்பாற்றப்படுவார்கள். பொய்யானவற்றை தெய்வமாக வணங்குபவர்கள் இரட்சிப்பின் மேன்மையை அடையாமல் அழிந்து போவார்கள். தேவன் ஒருவரே. **எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும். அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்** (1 தீமோத்தேயு 2:4). எல்லா மனிதரும் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதே தேவ சித்தம். தேவன் யாரையும் வற்புறுத்தவே மாட்டார். நாமாகவே அவரிடம் வரவேண்டும். நாம் பரலோகம் செல்வதும், நரகம் செல்வதற்கும் நாமே பொறுப்பாளியாய் இருக்கிறோம். தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவ தண்ணீரை இலவசமாய் வாங்கிக் கொள்ள கடவன் (வெளி 22:17).

ஒரு மனிதன் பாவம் செய்யும் போது, தேவனுக்கும், அவனுக்கும் உள்ள உறவு துண்டிக்கப்பட்டு விடுகிறது. அவன் இவ்வுலகத்தில் வாழ்ந்து கொண்டிருந்தாலும், அவனுடைய ஆத்துமா மரணமடைந்திருக்கிறது. இதுவே ஆவிக்குரிய மரணம், பாவத்தில் வாழ்கிறவர்கள் தன் மாம்சமும், தன் மனதும் விரும்பியவைகளைச் செய்வார்கள். அவர்கள் இரட்சிக்கப்படும்போது, ஆவிக்குரிய மரணத்திலிருந்து உயிர்ப்பிக்கப்படுகின்றனர். தேவன் ஆதாமிடம் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை புசிக்க வேண்டாம். அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார் (ஆதியாகமம் 2:17). தேவன் புசிக்கக்கூடாது என்று சொன்ன கனியை ஆதாமும், ஏவாளும் புசித்ததால் பாவம் செய்தனர். தேவன் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டது ஆத்தும மரணத்தைத்தான் குறிக்கிறது. அவர்கள் ஆத்துமா மரணமடைந்துவிட்டது. பாவத்தால் தேவனிடம் இருந்த நேரடியான தொடர்பை இழந்து போனார்கள். தேவன் அவர்களைக் கூப்பிட்டபோது, பயந்து ஒளித்துக் கொண்டார்கள். பாவம் தேவனை விட்டு நம்மை பிரித்து விடுகிறது. தேவன் நம்மை ஆராய்ந்து





அறிந்திருக்கிறார். அவருக்கு மறைவானது ஒன்றுமில்லை. அநேகர் தேவன் தங்களை பார்க்க மாட்டார் என்று எண்ணி தொடர்ந்து பாவத்தில் ஈடுபடுகிறார்கள். நம் நினைவுகளைக் கூட அவர் அறிந்து வைத்திருக்கிறார். நாம் செய்த எல்லா பாவத்திற்கும் தேவனுக்கு கணக்கு கொடுக்க வேண்டும். ஆதலால் தேவனிடம் நம் பாவங்களை மறைக்காமல் ஒப்புக்கொண்டு, அவரிடம் மன்னிப்பை பெற்றுக் கொள்ளும்போது, அவரோடுகூட உள்ள தொடர்பை மீண்டும் பெற்றுக் கொள்ளலாம்.

மனிதன் தேவனுடைய சாயலாகவும், அவருடைய ரூபத்தின்படி உருவாக்கப்பட்டான் (ஆதியாகமம் 1:26,27). தேவன் மனுஷனை பூமியின் மண்ணினால் உருவாக்கினார். ஜீவ சுவாசத்தை அவன் நாசியில் ஊதினார். மனுஷன் ஜீவாத்துமாவானான் (ஆதியாகமம் 2:7). அவனுக்குஉயிர் வந்தது. அவன் பாவம் செய்தபோது தான் தேவன் அவனைப் பார்த்து, நீ மண்ணாய் இருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய் என்றார். அவன் பாவம் செய்தவுடன் ஆத்தும மரணம் அடைந்தான். **பாவஞ்செய்கிற ஆத்துமா சாகும்** (எசேக்கியேல் 18:4). ஒரு மனிதன் மரணமடையும்போது, தேவனது சுவாசம் அவனை விட்டு எடுத்துக் கொள்ளப்பட்டு, அவன் உயிர்போய்விடுகிறது. அவனது உடல் மண்ணோடு மண்ணாகிவிடுகிறது. மனிதனுடைய ஆவி, ஆத்துமா (உள்ளார்ந்த மனிதன்) சரீரத்திலிருந்து பிரிக்கப்படுகிறது. மனிதனுடைய ஆவி, ஆத்துமா அழியாமல் என்றும் இருக்கும். நம் சரீரம் மண்ணினால் உருவாக்கப்பட்டபடியால், நம் உயிர் போனவுடன் நம் சரீரம் மட்டும் மண்ணிற்கு திரும்புகிறது. நம் ஆவியும், ஆத்துமாவும் மண்ணுக்கு திரும்புவதில்லை. இந்த பூமியில் பாவத்தில் வாழ்ந்தவனின் உள்ளார்ந்த மனிதன் (ஆவி, ஆத்துமா) பாதாளத்திற்கு கொண்டு செல்லப்படுவான். அங்கு அவன் வேதனையடைந்து கொண்டிருப்பான் (லூக்கா 16:23). இயேசு கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக் கொண்டு, பாவ மன்னிப்பைபெற்று கர்த்தருக்குள் வாழ்பவன் மரணமடையும்போது, அவனது உடலிலிருந்து பிரியும் உள்ளார்ந்த மனிதன் (ஆவி, ஆத்துமா) பரலோகத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு அங்கு தேவனோடு கூட இருப்பான்.

எங்களது பிளாட்டில் வயதான ஒருவர் வாச்மேனாக இருந்தார். அவர் இயேசுவை அறியாதவர். அவரது ஆவி ஐயோ, ஐயோ என்று வேதனையோடு கத்திக் கொண்டு போனதை கர்த்தர் எனக்கு சொப்பனத்தில் காண்பித்தார். அவர் மோட்டார் சைக்கிளில் போகும்போது, விபத்துக்குள்ளாகி, ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு, சிகிச்சை பலனளிக்காமல் வேதனையோடு கூட அவர் உயிர் பிரிந்தது. அவருக்கு இயேசுவைப் பற்றி சொன்னோம். ஏற்றுக் கொள்வதும், ஏற்றுக் கொள்ளாததும் அவரவர் கரத்தில் இருக்கிறது. பிரியமானவர்களே, நம் ஆத்துமா இரட்சிக்கப்படவில்லை என்றால் நாம் பாதாளம் போய் வேதனைப்பட்டுக் கொண்டேயிருக்க வேண்டும். நாம் இந்த உலகத்தில் வாழ்ந்து ஒரு பிரயோஜனமும் இல்லை. நாம் நிறைய பணம், ஆஸ்திகள், பொருட்கள் எல்லாம் சேர்த்து வைத்திருக்கலாம். அவற்றை வைத்து, நாம் பரலோகம் போக முடியாது. நம் ஆத்துமா இரட்சிக்கப்பட்டிருக்க வேண்டும். அந்த வாச்மேன் கஷ்டப்பட்டு சம்பாதித்து பணத்தை சேர்த்து வைத்து, அநேகருக்கு கடன் கொடுத்திருந்தார். ஆனால், இந்த உலகத்தை விட்டு சென்றபின் அவர் சேர்த்து வைத்த பணம் என்னவாயிற்று? அவரால் ஒன்றையும்கூட கொண்டுபோக முடியவில்லை.

### உண்மையான வாழ்வு

இயேசு கிறிஸ்து ஜனங்களிடம் இவ்வாறாகக் கூறினார்: **ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் இது அவனுக்கு ஜீவன் அல்ல** (லூக்கா 12:15). நாம் நமக்கு இருக்கிறவைகள் போதும் என்ற திருப்தியோடு, மனநிறைவோடிருக்க வேண்டும். **போதுமென்ற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம். உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டு வந்ததுமில்லை. இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டுபோவதுமில்லை என்பது நிச்சயம்** (1 தீமோத்தேயு 6:6,7). நம்மிடம் இருக்கும் பொருட்கள் எல்லாம்

இந்த உலகத்தில் அனுபவிக்கக் கர்த்தர் நமக்குக் கொடுத்தவை. அவற்றின் மேல் நம் ஆசை இருக்கக் கூடாது. அவற்றை நம்பி நாம் வாழக்கூடாது. கர்த்தரை நம்பி வாழவேண்டும். பேராசைப்படக்கூடாது. ஐசுவரியவான்களாக வேண்டுமென்று விரும்புகிறவர்கள் வீண் ஆசையினால் சோதனைக்குள்ளாகி கண்ணியில் மாட்டிக் கொள்கிறார்கள். அது அவர்களை அழித்துவிடும். பணம், நமக்கு சந்தோஷத்தைக் கொண்டு வரும் என்று அநேகர் நம்புகிறார்கள். **பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது** (1 தீமோத்தேயு 6:6-10). பணத்தின்மேல் ஆசைப்படுவதால் மேலும் மேலும் சேர்க்க வேண்டுமென்று நினைத்து இறுதியாக அவர்கள் துன்பத்திற்கு அவர்களே காரணமாகிறார்கள். நம்மை நாமே ஆராய்ந்து பார்ப்போம். நிறைய பணம் கிடைப்பதற்காக நாம் என்னென்ன காரியம் செய்கிறோம்? பணத்தை நேசிக்காதீர்கள்? மனிதர்களை நேசியுங்கள், தேவனை நேசியுங்கள். அவருடைய ஊழியத்தை நேசித்து, பண உதவியால் தாங்குங்கள். ஏழைகளுக்கும் துன்பப்படுகிற ஜனங்களுக்கும் உதவி செய்யுங்கள்.

ஒருவனுக்கு அதிக செல்வமும், வசதியும் இருப்பதைக் காட்டிலும், அவனுடைய ஆத்துமா, இரட்சிக்கப்படுவதே மிகவும் மேலானது. உண்மையான வாழ்விற்கு சொத்துக்களை வைத்து ஒன்றும் செய்யமுடியாது. மற்றவர்களுடைய சொத்துக்கள்மேல் ஆசைப்படுவது தவறு, அது பாவமாகும். அந்த ஆசையானது அதைப் பெற்றுக் கொள்ளும்படியாக நம்மை வழிநடத்தி, இன்னும் இன்னும் ஆஸ்திகளை சேர்க்கும்படி செய்யும் இந்த ஆசை உண்மையான வாழ்வின் அர்த்தத்தை அறிந்து கொள்ள முடியாதபடி தடுத்துவிடும். முடிவில் தன்னையே அந்த ஆசை அழித்துவிடும். அப்படி மற்றவர்களுக்குரியதை வாங்கி சேர்க்கும்போது, அந்த பணம் ஒன்றுக்கும் பிரயோஜனமில்லாமல் வீணாய்ப் போய்விடும்.

வாழ்க்கையில் பணம், பொருள், ஆஸ்திகள் மட்டுமே முதன்மையானது என்று அநேகர் நினைக்கின்றனர். அநேகர் அப்படியே வாழ்கின்றனர். கர்த்தருக்கு அவர்களுடைய வாழ்க்கையில் முதலிடம் இல்லை. தேவனைப்பற்றி அறிந்து கொள்ளவேண்டும் என்ற வாஞ்சை அவர்களுக்கு இருக்காது. அப்படிப்பட்டவர்களுடைய வாழ்க்கையில் சமாதானம், சந்தோஷம், நிம்மதி இருக்காது. வெளியே இருந்து பார்ப்பவர்களுக்கு அவர்கள் நன்றாக வளமுடன் வாழ்வதுபோலத் தோன்றும். ஆனால், உள்ளார்ந்த மனிதனில் நிம்மதி இழந்து காணப்படுவார்கள்.

இயேசுகிறிஸ்து உண்மையான வாழ்வு என்ன என்பதையும், வாழ்க்கையின் இறுதியில் என்ன நடக்கும் என்பதைக் குறித்து தெளிவாக நமக்கு காட்டுகிறார். பணம், பொருட்களுக்கு தன் வாழ்க்கையில் முதலிடம் கொடுத்த ஐசுவரியவானின் உவமையை லூக்கா 12:16-20-ல் காணலாம். ஐசுவரியவானின் நிலத்தில் நல்ல விளைச்சல் கிடைத்தது. அவன் தனக்குள்ளே இப்படியாக சிந்தித்தான்; தானியங்களை சேர்த்து வைப்பதற்கு இடமில்லையே என்று எண்ணி, களஞ்சியங்களை இடித்து பெரிதாகக் கட்டி, விளைந்த தானியத்தையும், பொருட்களையும் சேர்த்து வைத்து, ஆத்துமாவே, உனக்காக அநேக வருஷங்களுக்கு அநேகம் பொருட்கள் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது. நீ இளைப்பாறி, புசித்து குடித்து பூரிப்பாயிரு என்று கூறினான். **தேவனோ அவனை நோக்கி; மதிகேடனே, உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக் கொள்ளப்படும், அப்பொழுது நீ சேகரித்தவைகள் யாருடையதாகும் என்றார்** (லூக்கா 12:20). இவ்வுலகத்தின் பார்வையில் இவன் ஐசுவரியவான். தேவனுடைய பார்வையில் இவன் ஐசுவரியவானல்ல. ஐசுவரியவானுக்கு ஆத்துமாவைக் குறித்த சரியான அறிவு இல்லாதிருந்தது. அழிந்துபோகும் சரீரத்திற்கு தேவையான உணவுப் பொருட்களை சேமித்து வைத்தான். அழியாத ஆத்துமாவுக்காக அவன் ஒன்றும் செய்யவில்லை. நம் உயிர்போனவுடன் சரீரம் பயனற்றதாகி விடும். நம் ஆவி, ஆத்துமா பாதாளத்திற்கு செல்லாதபடி நாம் மறுபடியும் பிறக்கும் அனுபவத்தை





பெற்றுக் கொள்ள வேண்டும் (யோவான் 3:3,5). வேதத்தை படிப்பதன் மூலமும், ஜெபத்தின் மூலமும், கர்த்தருடன் நெருங்கி வாழலாம். அனுதினமும் கர்த்தரை அறிகிற அறிவில் நாம் வளர வேண்டும். அப்பொழுது ஆத்துமாவிலே நாம் வளரலாம்.

ஐசுவரியவானுக்கு பரலோகத்தில் பொக்கிஷத்தை சேர்த்து வைக்க வேண்டும் என்ற எண்ணமில்லாதிருந்தது. பூமியிலே பொக்கிஷங்களை சேர்த்து வைத்தான். தனக்கு தானியங்கள், பொருட்கள் தந்த கர்த்தரை அவன் நினைக்கவில்லை. ஒருநாள் இவ்வுலகத்தை விட்டு கடந்து செல்ல வேண்டும் என்ற சிந்தனையில்லாதிருந்தான். அவன் மரித்தபின் அவன் சேர்த்து வைத்தவைகள் யாருக்கு போகும் என்றும், தான் எங்கே போவேன் என்ற எண்ணமும் இல்லாதிருந்தது. தான் சேர்த்ததை அனுபவிக்கும் முன்பே மரித்து விட்டான். சொத்துக்கள் அவனுக்கு வாழ்வும், பாதுகாப்பும் தரவில்லை. ஐசுவரியவான்கள் தங்கள், பணமும், சொத்துக்களும் தங்களை பாதுகாக்கும் என்று நம்புகின்றனர். ஒரு பட்டணத்திற்கு ஒரு கோட்டை எப்படி பாதுகாப்போ, அப்படிப்போல பணம் தங்களுக்கு பாதுகாப்பு என்று நினைக்கிறார்கள். ஆனால் பணம் அவர்களுடைய ஆத்துமாவையோ, ஆவியையோ அழிவிலிருந்து பாதுகாக்காது.

நாம் இந்த உலகத்தில் எப்படி வாழ்வது என்பதை குறித்து நாம் பல முன்னேற்பாடுகளையும், எப்படி நம் குடும்பத்தையும் நம் வாழ்க்கையையும் நடத்துவதுபற்றியும் பல திட்டங்கள் போடுகிறோம். நாம் இந்த உலகத்தை விட்டு கடந்து சென்ற பின் வாழப் போகும் வாழ்க்கையை அலட்சியப் படுத்திவிடுகிறோம். அப்படி அக்கரையில்லாமல் இருந்தால் நாம் அதிர்ச்சியடையும்படி நமக்கு நடக்கும். ஐசுவரியவானைப் போல இவ்வுலக வாழ்வை குறித்து மட்டும் சிந்தித்தால் பாதாளத்திற்கு செல்ல வேண்டும். நாம் ஒவ்வொரு வரும் அழிவுக்கு விலக்கி நம்மை காத்துக் கொள்ள வேண்டும். அழிந்துபோகும் இவ்வாழ்க்கையை யோசிக்காமல், நித்திய நித்தியமாக நாம் தேவனோடு இருக்கும் பரலோக வாழ்க்கைக்கு நம்மை ஆயத்தப்படுத்து வோம்.

**விதைக்கிறவன் உவமை**

தேவனுடைய ராஜ்யத்திற்கான சுவிசேஷத்தை பிரசங்கித்தபோது, ஜனங்கள் வெவ்வேறு விதமான இருதயத்தோடு இருந்தனர். சிலர் கடின இருதயத்தோடிருந்தனர். சிலர் மேலோட்டமாக கேட்டனர். சிலர் உலக கவலைகளால் நிறைந்ததனால் கவனம் செலுத்த முடியாமல் கேட்டனர். சிலர் திறந்த மனதோடு கேட்டனர். இதை விதைக்கிறவன் உவமையின் மூலம் இயேசு கிறிஸ்து விளக்குகிறார் (மத்தேயு 13:3-23). ஒரு விவசாயி



விதைகளை விதைக்கையில் சில விதைகள் வழியருகே விழுந்தது. இதை பறவைகள் வந்து தின்றன. வழியருகே விழுந்த விதை கடின இருதயமுள்ள மக்களை குறிப்பிடுகிறது. இவர்கள் தேவனுடைய வசனத்தைக் கேட்டும் புரிந்து கொள்ள மாட்டார்கள். அவர்கள் இருதயத்தில் விதைக்கப்பட்டதை சாத்தான் பறித்து கொள்வதனால் தேவன்மேல் கவனம் செலுத்தாமல் தேவனை மறந்திருப்பார்கள். சில விதைகள் பாறைகள் மேல் விழுந்தன. அங்கு போதுமான மண்ணில்லாததால், விதைகள் வேகமாக முளைத்தது. ஆழமான வேர்கள் இல்லாமையால், வெயில் ஏறினபோது, அவை கருகி போயின. பாறையில் விழுந்த விதைகள் மேலோட்டமாக வசனத்தைக் கேட்டவர் களை குறிக்கிறது. போதனைகளைக் கேட்டு உடனே அதை சந்தோஷத்தோடு ஏற்றுக் கொள்வார்கள். போதனைகளை தன் மனதில் ஆழமாக பதியவைத்துக் கொள்ளாததினால் கொஞ்சகாலம் மாத்திரம் நிலைத்திருப்பார்கள். போதனைகளை ஏற்றுக்

கொண்டதினால் உபத்திரவமும், துன்பமும் உண்டான வுடன், அவர்கள் விரைவாக அதை விட்டு விடுகிறார்கள். முற்றிலும் வார்த்தையின் படி நடக்க தங்களை ஒப்புக் கொடுக்கா தவர்கள் எளிதில் பின்மாற்றமடைந்து விடுவார்கள். சில விதைகள் முள்ளுள்ள இடங்களில் விழுந்தது. முட்புதருக்கிடை யில் விழுந்த விதைகளை, இவ்வுலக வாழ்வின்மீதும், பணத்தின்மீதும் ஆசை கொண்டவர்களை குறிப்பிடுகிறது. இவர்கள் போதனைகளைக் கேட்டும் உலக காரியத்தைக் குறித்தே கவலை யோடிருப்பார்கள். ஐசுவரியத்தின் மயக்கத்தில் நிறைந்திருப்பதனால், வார்த்தை அவர்களுக்குள் நிலைத்திருப்ப தில்லை. ஒரு பலனும் கொடுப்பதில்லை. உலக பிரகாரமான சந்தோஷத்தினாலும், பணத்தின்மேல் உள்ள ஆசையினால் நிரம்பி, பணத்தை நம்பியிருப்பார்கள். கர்த்தருடைய வார்த்தைக்கு முக்கியத்து வம் கொடுக்க மாட்டார்கள். சில விதையோ நல்ல நிலத்தில் விழுந்தது. நல்ல நிலத்தில் விழுந்த விதை, போதனை களைக் கேட்டு, புரிந்து கொள்ளும் மனிதனைக் குறிக்கிறது. அம்மனிதன் வார்த்தையை ஏற்றுக்கொண்டு அதற்கு கீழ்ப்படிந்து நடப்பதினால் வளர்ந்து நூறாகவும், அறுபதாகவும், முப்பதாகவும் பலன் தருவான். அவன் தேவசித்தத்தை அறிந்து, அதன்படி நடப்பான். அவன் வாழும் வாழ்க்கையில் ஆவியின் கனிகள் வெளிப்படும்.

**கோதுமையும், களைகளும் குறித்த உவமை**

**பரலோக ராஜ்யம் தன் நிலத்தில் நல்ல விதையை விதைத்த மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறது** (மத்தேயு *13:24*). ஒரு மனிதன் தனது நிலத்தில் நல்ல விதையை விதைத்தான். அந்த மனிதன் உறங்கிக் கொண்டிருந்தபோது, அவனது பகைவன் வந்து, கோதுமை விதைகளுக்கிடையில் களைகளை விதைத்தான். பின் விதைகள் முளைத்தன. கோதுமைக்கும், களைக்கும் வித்தியாசம் கண்டுபிடிக்க முடியாதபடி, இரண்டும் ஒரே மாதிரி இருந்தன. அம்மனிதனின் வேலைக்காரர்கள் அவனிடம், களைகளை நாங்கள் நீக்குகிறோம் என்று கேட்டனர். அம்மனிதன், வேண்டாம்; நீங்கள் களையெடுக்கும்போது, கோதுமையுங்கூட பிடுங்காதபடிக்கு இரண்டையும் அறுவடைகாலம் வரையிலும் ஒன்றாக வளரவிடுங்கள். அறுவடையின்போது களைகளை சுட்டெரிக்கப் போவதாகவும், கோதுமையை களஞ்சியத்தில் சேர்க்கப் போவதாகவும் கூறினான்.

நல்ல விதையை விதைக்கிறவன் மனுஷகுமாரன், களைகளை விதைக்கிறவன் சாத்தான். நிலம் உலகம் நல்ல விதை தேவனுடைய ராஜ்யத்தின் பிள்ளைகள் (விசுவாசிகள்). தேவனை பின்பற்றி நடப்பவர்கள். களைகள் சாத்தானுடைய பிள்ளைகள் (அவிசுவாசிகள்) தேவனை பின்பற்றாதவர்கள். இயேசு கிறிஸ்து உண்மையான தம்முடைய ஊழியக்காரர்கள் மூலமாக வசனத்தை விதைக்கும் போது, அநேகர் இரட்சிக்கப்படுவார்கள். இரட்சிக்கப்பட்டவர்கள் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் சேர்க்கப்படுகின்றனர். சாத்தான் கள்ள போதகங்களை கள்ளப்போதகர்கள் மூலமாக விதைப்பான். சபைக்குள்ளும் கர்த்தருடைய பிள்ளைகளும், சாத்தானுடைய பிள்ளைகளும் இருப்பார்கள். அவர்களை வித்தியாசம் கண்டுபிடிக்க முடியாது. மற்றவர்களை பாவம் செய்யும்படி தூண்டுபவர்கள், கள்ளப்போதகர்களும், பொருளாசையுள்ளவர்களும் இருப்பார்கள். சபைக்குள்ளே தேவனுடைய பிள்ளைகளைப் போல இருந்து கொண்டு அக்கிரமம் செய்பவர்கள், மற்றவர்களுக்கு இடறல் உண்டாக்குபவர்களாக இருப்பார்கள். பிசாசின் ஆளுகைக்குள்ளாக இருப்பார்கள். கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொண்டு, அவரை பின்பற்றாமல், அவருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படியாமல் இருப்பார்கள். உலகத்தின் முடிவிலே தேவதூதர்கள் பாவம் செய்தவர்களை எரி நரகத்திலே தள்ளுவார்கள். அங்கு அவர்கள் வேதனையினால் கூக்குரலிடுவார்கள். நரகத்தில் அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும் (லூக்கா *13:41,43*). நல்ல மனிதர்கள் சூரியனைப்போல ஒளிவீசுவார்கள். அவர்கள் தேவனுடைய ராஜ்யத்தி ற்குள்ளிருப்பார்கள். அவர்கள் ஜனங்களை நல்வழியில் நடத்த கற்றுக் கொடுத்தவர்கள். இந்த உலகத்தின் முடிவில் யார் உண்மையான தேவபிள்ளைகள் என்பதை அறிந்து கொள்ளலாம்.





தேவனே நீதியுள்ள நியாயாதிபதி. நாம் ஒவ்வொருவரும் தேவனுக்கு பதில் சொல்லியே ஆகவேண்டும். மற்றவர்களை ஆராய்ந்து அறிவதைவிட நம்மை நாமே ஆராய்ந்து பார்ப்போம். நாம் இறந்த பின் எங்கே போவோம், என்ன நடக்கும் என்கிற அக்கரையில்லாமல் உணராமல் இருப்பவர்கள், சுயநலத்தோடு அலட்சியப்போக்கோடு இருப்பவர்கள் அதற்கான தண்டனையை அடைவார்கள். தேவனுடைய வார்த்தையின்படி நடப்பவர்கள் (தேவனுடைய ராஜ்யத்தின் பிள்ளைகள்) பரலோகத்திற்கு செல்வார்கள்.

**புதையல் உவமை**

**பரலோக ராஜ்யம் நிலத்தில் புதைத்திருக்கிற பொக்கிஷத்துக்கு ஒப்பாயிருக்கிறது** (மத்தேயு *13:44*). நிலத்தில் புதைந்திருக்கிற பொக்கி ஷத்தை ஒருவன், கண்டுபிடித்தான். மீண்டும் அவன் அப்பொக்கிஷத்தை புதைத்து வைத்து, அந்த நிலத்தை வாங்குவதற்காக தன்னிடமிருந்த எல்லாவற்றையும் விற்றான். தேவனு டைய ராஜ்யம் நம்மிடமிருக்கும் எல்லாவற்றைக் காட்டிலும் அதிக விலைமதிப்புள்ளது. அந்த மனிதன் தன்னிடமிருக்கும் எல்லாவற்றையும் கொடுத்து அதை பெற்றுக் கொள்ள ஆயத்தமாயிருந்தான். அது விலை மதிப்பில்லாதது. இவ்வுலகத்தின் ஆஸ்தி, பணம், எல்லாம் கொஞ்ச நாட்கள் தான் நிலைத்திருக்கும். நிரந்தரமற்றது. தேவனுடைய ராஜ்யத்துக்குள் நாம் வரும்போது கிடைக்கும். சந்தோஷமும், சமாதானமும் நம்மிடமிருக்கும் எல்லாவற்றையும் கொடுத்தாலும் கிடைக்காது.

**முத்து வியாபாரி உவமை**

**பரலோக ராஜ்யம் நல்ல முத்துக்களைத் தேடுகிற வியாபாரிக்கு ஒப்பாயிருக்கிறது** (மத்தேயு *13:45*). ஒருநாள் அந்த வியாபாரி, மிகச்சிறந்த முத்து ஒன்றைக் கண்டான். அம்முத்தை வாங்குவதற்காக, தன்னிடம் இருந்த அனைத்தையும் விற்றான். பரலோக ராஜ்யத்தில் சேர்வதற்காக, நம்மிடம் இருக்கும் எல்லாவற்றையும் இழந்தாலும், அது நமக்கு லாபமே தவிர, நஷ்டமல்ல.

**கடுகு விதை உவமை**

**பரலோக ராஜ்யம் கடுகு விதைக்கு ஒப்பாயிருக்கிறது** (மத்தேயு *13:31,32*). பூமியிலுள்ள சகல விதைகளிலெல்லாம் மிகச் சிறியது கடுகு. ஆனால், அது பூமியில் விதைக்கப்பட்ட பின்பு முளைத்து மிகப்பெரிய செடிகளில் ஒன்றாக வளர்ந்து, பின் அது மிகப் பெரிய மரமாக வளர்கிறது. அநேக பறவைகள் அதன் கிளைகளில் வந்து கூடுகட்டுகிறது. தேவனுடைய ராஜ்யமும் சிறிதாக தோன்றலாம். அது அநேக ஆயிரம் ஆத்துமாக்கள் இளைப்பாறுதல் அடையும் இடமாக இருக்கிறது. விலை மதிப்பில்லாத கிடைப்பதற்கு அரிய சந்தோஷமும், சமாதானமும் பரலோக ராஜ்யத்தில்தான் உண்டு. இன்றைக்கு அநேகர் சொத்து, பணம், பதவி என்று வாழ்நாளெல்லாம் அது கிடைப்பதற்காக தேடி அலைகிறார்கள். இவையெல்லாம் இருந்தாலும் சந்தோஷம், சமாதானம் இல்லை என்றால் ஒரு பிரயோஜனமும் இல்லை. இது பரலோக ராஜ்யத்தில்தான் உண்டு.

**புளித்தமாவு பற்றிய உவமை**

**பரலோக ராஜ்யம் புளித்த மாவுக்கு ஒப்பாயிருக்கிறது. அதை ஒரு ஸ்திரீ எடுத்து, முழுவதும் புளிக்கும் வரைக்கும் மூன்றுபடி**

**மாவிலே அடக்கி வைத்தாள்** (மத்தேயு 13:33). கொஞ்சம் புளித்தமாவானது, அனைத்து மாவையும் ஊடுருவிச் சென்று, புளிக்க வைக்கிறது. தேவனுடைய ராஜ்யமும் சிறிதாக தொடங்கப்படலாம். வெளியே தெரியாதபடி இருக்கலாம். ஆனால், அது வேகமாக ஜனங்களுக்குள் ஊடுருவிச் சென்று, வளர்ந்து பெரிய விளைபயன்களை உலகத்தில் உண்டாக்குகிறது. தேவனுடைய ராஜ்யத்தின் சுவிசேஷம் உலகமெங்கும் அறிவிக்கப்படும். புறஜாதி மக்கள் மனந்திரும்பி, தேவனுடைய ராஜ்யத்துக்குள் சேர்க்கப்படுவார்கள். தேவனுடைய ராஜ்யம் சிறிதாக ஆரம்பிக்கப்பட்டு பெரிய வழிகளில் வளர்கிறது. ஒரு மனிதனின் சிறிய விசுவாசம் வளர்ந்து பெரிதாகி, பெரிதான பலன்களை கர்த்தரிடத்திலிருந்து பெற்றுக் கொள்ள வைக்கிறது.

### வலை உவமை

**பரலோகராஜ்யம் கடலிலே போடப்பட்டு, சகலவிதமான மீன்களையும் சேர்த்து வாரிக்கொள்ளும் வலைக்கு ஒப்பாயிருக்கிறது** (மத்தேயு 13:47). கடலில் வலையைப் போடும்போது, அதில் பலவகையான மீன்களைப் பிடிக்கலாம். நல்ல மீன்களை எடுத்துக் கொண்டு, வேண்டாத மீன்களை எறிந்து விடுவார்கள். இவ்வுலகத்தின் முடிவு காலத்திலும் இவ்வாறே நடக்கும். தேவதூதர்கள் வந்து, நீதிமான்களின் நடுவிலிருந்து துன்மார்க்கரைப் பிரித்து அக்கினிசூளையில் போடுவார்கள். அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும் (மத்தேயு 13:50). அவர்கள் வலியினால் கூக்குரலிட்டுப் பற்களை கடிப்பார்கள். இயேசு கிறிஸ்துவை அறிந்திருந்தும் ஆவிக்குரிய ஜீவியத்தை வாழாதவர்கள் (பாரம்பரிய கிறிஸ்தவர்கள், பெயருக்கு கிறிஸ்தவர்களாக இருப்பவர்கள்) வேத வார்த்தையின்படி நடக்கமாட்டார்கள். அதனால் அவர்கள் பரலோக ராஜ்யத்துக்குள் பிரவேசிக்கமுடியாது. இன்றைக்கு இயேசு கிறிஸ்துவை அறியாத அநேகர், அவரை அறிந்து கொண்டு, ஆவிக்குரிய ஜீவியத்துக்குள்ளாக கடந்து வந்து பரலோக ராஜ்யத்துக்குள் சேர்க்கப்படுகிறார்கள். நாம் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு, அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து நடக்க வேண்டும். மற்றவர்களுக்கும் இயேசு கிறிஸ்துவின் அன்பையும், மனதுருக்கத்தையும், நற்குணங்களையும், கிருபையையும் குறித்துச் சொல்ல வேண்டும். நாம் யாரையும் வற்புறுத்தவோ, அவர்களை கட்டுப்படுத்தவோ முடியாது. தேவனை ஏற்றுக் கொள்வதும், ஏற்றுக் கொள்ளாததும் அவர்களுடைய விருப்பம்.

### பத்து கன்னிகைகள் உவமை

**பரலோகராஜ்யம் தங்கள் தீவட்டிகளைப் பிடித்துக் கொண்டு, மணவாளனுக்கு எதிர்கொண்டு போகப் புறப்பட்ட பத்து கன்னிகைகளுக்கு ஒப்பாயிருக்கும்** (மத்தேயு 25:1). மேற்கத்திய நாடுகளில் திருமணங்கள் நதியோரங்களில் அல்லது பொது இடங்களில் நடைபெறும். மணமகனும், மணமகளும் தங்கள் தோழர்களுடன் பல்லக்குகளில் வருவார்கள். பின்மணமகளின் வீட்டில் தொடர்ந்து ஏழுநாட்கள் விருந்து நடைபெறும். விருந்து நாட்களுக்குப் பின், மணமகன், மணமகளை அழைத்துக் கொண்டு மேளதாளங்களுடன் மகிழ்ச்சியாக தன் வீட்டிற்கு செல்வான். இந்த பயணம் இரவுவேளைகளில் நடைபெறும். மணமகன் இவ்வாறு தனது வீட்டை நெருங்கும்போது, ஒரு கன்னிகை குழு அவர்களை வரவேற்று அழைத்துச் செல்ல வேண்டும். இவ்வாறு வரவேற்புக்கு காத்திருந்த கன்னிகைகளைப் பற்றிய உவமையைத்தான் கர்த்தர் இங்கு கூறுகிறார். இரவு எப்பொழுது மணமகனும், திருமணக் குழுவினரும் வீட்டுக்கு வருவர் என்பது கூறமுடியாது. மணமகனின் குழுவினரின் ஆர்ப்பரிப்பைக் கேட்கும்போதுதான் கன்னிகைகள் சென்று வரவேற்று வரவேண்டும். அவர்களது கையில் சாதாரணமாக துணியினாலான தீப்பந்தங்





களே காணப்படும். இந்த தீப்பந்தங்களை எண்ணெயில் முக்கி பயன்படுத்துவர். கன்னிகை குழு வரவேற்று மணமகனும், மணமகளும் வீட்டின் உள்ளே ஏறியவுடன் வீட்டின் கதவு அடைக்கப்படும். பின்பு யாரும் உள்ளே போக முடியாது. பின்பு உள்ளே கடந்து வந்த அனைவருக்கும் விருந்து அளிக்கப்படும்.

பத்து கன்னிகைகளில், ஐந்து புத்தியில்லாத கன்னிகைகள் தங்கள் தீவட்டிகளை எடுத்துக் கொண்டு போனார்கள். எண்ணெயையோ கூட எடுத்துக் கொண்டு போகவில்லை. இவர்களை இரட்சிக்கப்பட்டும் ஆவியானவரின் அபிஷேகத்தை பெறாதவர்களுக்கு ஒப்பிட்டிருக்கிறது. ஐந்து புத்தியுள்ள கன்னிகைகள் தீவட்டிகளோடுகூட தங்கள் பாத்திரங்களில் எண்ணெயையும் கூட கொண்டு போனார்கள். இவர்களை இரட்சிக்கப்பட்டு ஆவியானவரின் அபிஷேகத்தை பெற்றவர்களுக்கு ஒப்பிட்டிருக்கிறது. மணவாளன் வருகிற சத்தம் கேட்ட வுடன் அவர்கள் தீவட்டிகளை ஆயத்தப்படுத்தினார்கள். புத்தியில்லாத கன்னிகைகளின் தீவட்டிகள் எண் ணெய் இல்லாததால் அணைந்து போயிற்று. அதனால் அவர்கள் கடை யில் எண்ணெய் வாங்கச் சென்றார்கள். அப்பொழுது மணவாளன் வந்தான். ஆயத்தமாயிருந்த ஐந்து கன்னிகைகள் மணவாளனுடன் கல்யாண வீட்டிற்குள் சென்றார்கள். கதவும் மூடப்பட்டது. புத்தியில்லாத கன்னிகைகள் வந்து கதவை திறக்கும்படி மணவாளனிடம் கூறினர். ஆனால் மணவாளனோ உங்களை அறியேன் என்று சொன்னான். இயேசு கிறிஸ்துவின் வருகையும் இப்படியாகத்தான் இருக்கும். இந்த உவமையின் மூலம் நாம் எப்பொழுதும் அவருடைய வருகைக்கு தயாராக இருக்கவேண்டும் என்பதையும், அவருடைய வருகை வரை நாம் எப்படியாக வாழவேண்டும் என்பதையும் குறிக்கிறது. அவருடைய வருகையில் எடுத்துக் கொள்ளப்படா மல், ஏமாந்து போய்விடக்கூடாது. இரட்சிக்கப்பட்டால்போதும் என்று அலட்சியமாக இருந்து விடாமல் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை பெற்றுக் கொள்ள வேண்டும்.

பத்து கன்னிகைகள் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு காத்திருக்கும் மக்களை குறிக்கிறது. **மனுஷகுமாரன் வரும் நாளையாவது, நாழிகையையாவது நீங்கள் அறியாதிருக்கிறபடியால் விழித்திருங்கள்** (மத்தேயு 25:13). இயேசு கிறிஸ்து அவருடைய பிள்ளைகளை பரலோகத்துக்கு எடுத்துச் செல்ல திரும்ப வருவார். நாம் எல்லோரும் ஆயத்தமாயிருக்க வேண்டும். கடைசி நிமிடத்தில் நாம் ஆயத்தப்பட முடியாது. நாம்தான் அவரோடுகூட உள்ள உறவில் வளர்ந்து நிலைத்திருக்க வேண்டும். இறுதிவரை கர்த்தரில் நிலைத்திருக்கிறவர்களே அவரோடுகூட சொல்ல முடியும்.

**கடைசி நாட்களில் நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்** (அப்போஸ்தலர் 2:17). ஆவியானவரின் வல்லமை நமக்குள் இறங்கிவரும்போது, நம் இருதயத்திற்குள்ளும், நம் வாழ்க்கையிலும் இருக்கிற வேண்டாத மாம்சீக குணங்களை சுட்டெரித்து அகன்றி, நம்மை பரிசுத்தப்படுத்தி விடுகிறது. மற்றவர்களுக்கு வெளிச்சமாக, ஆசீர்வாதமாக இருக்கும் படியாக செய்கிறது. ஆவியானவரும் நமக்குள்ளே வந்து தங்கிவிடுவார். இரட்சிக்கப்பட்டு இன்னும் ஆவியானவரின் அபிஷேகத்தை பெற்றுக் கொள்ளவில்லை என்றால் அவரிடம் கேட்டு பெற்றுக்கொள்வோம்.

### தாலந்துகள் உவமை

**பரலோகராஜ்யம் புறதேசத்துக்குப் பிரயாணமாய்ப் போகிற ஒரு மனுஷன், தன் ஊழியக்காரரை அழைத்து, தன் ஆஸ்திகளை அவர்கள் வசமாய் ஒப்புக் கொடுத்ததுபோல் இருக்கிறது** (மத்தேயு 25:14). அவனவனுடைய திறமைக்குத் தக்கதாக

ஒருவனிடத்தில் ஐந்து தாலந்தும், ஒருவனிடத்தில் இரண்டு தாலந்தும், ஒருவனிடத்தில் ஒரு தாலந்துமாக கொடுத்து பின் அவன் பிரயாணப்பட்டு போனான். ஐந்து தாலந்தை வாங்கினவன், மேலும் ஐந்து தாலந்தை சம்பாதித்தான். அப்படியே இரண்டு தாலந்துகளை வாங்கினவன் மேலும் இரண்டு தாலந்துகளை சம்பாதித்தான். ஆனால் ஒரு தாலந்தை வாங்கினவன், நிலத்தை தோண்டி, பணத்தை புதைத்து வைத்தான். நீண்ட காலம் கழித்து எஜமானன் திரும்பிவந்தான். ஐந்து தாலந்தை பெற்றவன் எஜமானனிடம், தான் மேலும் ஐந்து தாலந்தை சம்பாதித்ததாகவும், இரண்டு தாலந்தை பெற்றவன் மேலும் இரண்டு தாலந்தை சம்பாதித்ததாகவும் கூறினான். எஜமானன் அவர்களிடம் கொஞ்சத்திலே உண்மையாய் இருந்தீர்கள், அநேகத்தின்மேல் உங்களை அதிகாரியாய் வைப்பேன் என்றான். ஒரு தாலந்தை பெற்றவன், நீர் தந்த பணத்தை நிலத்திலே புதைத்து வைத்தேன் என்றான். எஜமானன் அவனிடம் பொல்லாத சோம்பேறி வேலைக்காரனே நீ என் பணத்தை வங்கியில் செலுத்தியிருந்தால் என் பணமும், அதற்கான வட்டியும் கிடைத்திருக்குமே என்று சொல்லி, அவனிடம் இருந்த ஒரு தாலந்தை எடுத்து பத்து தாலந்துள்ளவனுக்கு கொடுக்கச் சொன்னான்; தான் பெற்றிருப்பதைப் பயன்படுத்துகிற ஒவ்வொருவனும் மேலும் அதிகம் பெறுவான். அவனுக்கு தேவையானதைவிட மிக அதிகமாகக் கிடைக்கும். ஆனால், தான் பெற்றிருப்பதை பயன்படுத்தாதவனிடமிருந்து அனைத்தும் பறிக்கப்படும் என்று சொல்லி, அந்த பயனற்ற வேலைக்காரனைத் தூக்கி புறம்பான இருளிலே தள்ளிபோடுங்கள். அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும் என்றான்.

கர்த்தர் நமக்கு கொடுத்துள்ள தாலந்துகளை நாம் கர்த்தருக்காக பயன்படுத்த வேண்டும். நம்முடைய நேரத்தை, நம் ஆற்றலை, பணத்தை ஞானமாக, கர்த்தருக்காக பயன்படுத்த கர்த்தர் நம் ஒவ்வொருவரிடமும் எதிர்பார்க்கிறார். இயேசு கிறிஸ்துவின் வருகைவரை அவர் நமக்கு கொடுத்தவற்றை சோம்பலில்லாமல் பயன்படுத்த நாம் பொறுப்புள்ளவர்களாக இருக்கிறோம். ஆண்டவருக்கும், மற்றவர்களுக்கும் பயனுள்ள ஒரு வாழ்க்கையை நாம் வாழ வேண்டும். உண்மையான ஊழியத்தை பணத்தால் தாங்கலாம். ஊழியம் செய்பவர்களுக்கு உதவி செய்யலாம். கர்த்தருக்காக ஒரு காரியமும் செய்யாதவர்களும், தேவனுடைய ராஜ்யம் கட்டப்படுவதற்கு வாஞ்சையில்லாமல் இருப்பவர்களும் தண்டிக்கப்படுவார்கள். உண்மையும், உத்தமுமாக ஊழியம் செய்பவர்களுக்கு கர்த்தருடைய கிருபையும், ஆசீர்வாதமும் பெருகும். சோம்பலாய் இருப்பவர்கள் தங்களிடம் இருப்பதையும் இழந்து போவார்கள். ஆத்தும ஆதாயம் செய்யாமல், சரியாக ஊழியம் செய்யாமல் இருப்பவர்களின் நிலைமையும் இத்தகையதே. கர்த்தருடைய வேலையை அசதியாய் செய்கிறவன் சபிக்கப்பட்டவன் என்று கர்த்தருடைய வார்த்தை சொல்லுகிறது.

நியாயத்தீர்ப்பு நாளிலே உலகில் உள்ள எல்லா மக்களும் இயேசு கிறிஸ்துவுக்குமுன் சேர்க்கப்படுவார்கள். நல்லவர்களை தனது வலது பக்கமும், தீயவர்களை தனது இடது பக்கமும் நிறுத்துவார். வலதுபக்கம் நிற்பவர்களைப் பார்த்து பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் என்று தன்னுடைய ராஜ்யத்தில் சேர்த்துக் கொள்வார். நான் பசியாயிருந்தபோது, தாகமாயிருந்தபோது, ஆடையில்லாமல் இருந்த போது, அந்நியனாயிருந்த போது, நோயாயிருந்தபோது, சிறையிலிருந்த போது உதவி செய்தீர்கள். மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்பார் (மத்தேயு 25:40). கர்த்தருடைய ஊழியத்தை செய்பவர்களுக்கும், ஏழை, எளியவர்களுக்கும் உதவி செய்வதை தனக்கே செய்வதாக கூறுகிறார். என் நாமத்தினிமித்தம் உங்களுக்கு ஒரு கலசம் தண்ணீர் குடிக்கக் கொடுக்கிறவன் அதன் பலனை அடையாமற்போவதில்லை (மாற்கு 9:41). தேவனுக்கென்று கொடுப்பதன் பலனை நிச்சயம் நமக்கு தருவார். சிலர் தேவையில் இருக்கும் விசுவாச குடும்பங்களுக்கு உதவி செய்யாமல் இருக்கிறவர்களுக்கே கொடுத்துக் கொண்டிருப்பார்கள். அதனால் ஒரு பலனும் அவர்களுக்கு கிடைக்காது. அதனால் அவர்கள் வாழ்க்கையில் வறுமை வரும். நீ செல்வந்தனாகும் பொருட்டு ஏழைகளைத் துன்புறுத்துவதும், செல்வந்தர்களுக்கு அன்பளிப்புகளைக் கொடுப்பதும் ஆகிய இரண்டு செயல்களும் உன்னை ஏழையாக்கும் (நீதிமொழிகள் 22:16). எப்படி ஏழ்மை வருமென்றால் நெருக்கடியான ஒரு சூழ்நிலை வரும். ஏதோ ஒரு பயம் அவர்களுக்கு இருக்கும். ஏதோ ஒரு பாரத்தை சுமந்து கொண்டேயிருப்பார்கள். அது அவர்களை அழுத்திக் கொண்டேயிருக்கும். இயேசு கிறிஸ்து தன் இடதுபக்கம் நிற்பவர்களைப் பார்த்து, சபிக்கப்பட்டவர்கள் என்றும் பிசாசுக்காகவும், அவனுடைய தூதர்களுக்காகவும் ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற அக்கினியிலே போடுங்கள் என்று சொல்வார். நான் பசியாயிருந்த போது, தாகமாயிருந்தபோது, ஆடையில்லாமல் இருந்தபோது, அந்நியனாயிருந்தபோது, நோயாயிருந்தபோது, சிறையிலிருந்தபோது உதவி செய்யவில்லை. மிகவும் சிறியவர்களாகிய இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதையேனும் செய்ய மறுத்தால், நீங்கள் எனக்கு செய்ய மறுத்ததற்கு சமமாகும் (மத்தேயு 26:45) என்றார்.

தேவனுடைய வார்த்தையின்படி நடப்போம், பரலோக ராஜ்யத்தை சுவீகரித்துக் கொள்வோம். ஆமென்!

**உங்கள் சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?**

இந்தப் பத்திரிகை வேண்டுவோர் சந்தா அனுப்பி பெற்றுக் கொள்ளவும்.

| | |
|---|---|
| **உள்நாட்டு வருட சந்தா** | ரூ. 200/- |
| **வெளிநாட்டு வருட சந்தா** | ரூ. 2000/- |

**S.PAULRAJ KENNEDY** என்ற பெயருக்கு DD/M.O / Cheque மூலம் அனுப்பவும். உங்களது முழு முகவரியையும் எழுதுங்கள். **ICICI** வங்கி வாயிலாகவும் நீங்கள் அனுப்பலாம்.

ICICI **வங்கி கணக்கின் பெயர் : S.PAULRAJ KENNEDY**

**ICICI வங்கி கணக்கு எண் :** 0350 0150 7744

**எங்களது முகவரி :** எஸ்.பால்ராஜ் கென்னடி, ஏ-1, டேஜு பிளாஸா, 2 தெற்கு அவென்யூ, ஸ்ரீநகர் காலனி, சைதாப்பேட்டை, சென்னை - 600 015. தமிழ்நாடு, இந்தியா



**ஜெப தேவைக்கும்,**
**தேவ ஆலோசனைக்கும்**

**+ 91 - 44 - 22353500**
**+ 91 - 9940667881**

www.kennedyministries.org

E-mail: nijakennedy@yahoo.com



# எளிமையான ஜெபத்தின் வல்லமை

**— ஜாய்ஸ் மேயர்**

(‘தி பவர் ஆஃப் சிம்பிள் பிரேயர்’ என்ற புத்தகத்திலிருந்து சில காரியங்களை மாத்திரம் இங்கே தொகுத்து கொடுத்துள்ளேன். இந்த புத்தகத்தை வாங்கிப் படியுங்கள். அது உங்களது ஜெப ஜீவிதத்திற்கு மிகவும் பிரயோஜனமாக இருக்கும். உங்களது ஜெபம் வல்லமையுள்ளதாக மாறும், அதனால் உங்கள் வாழ்க்கையும் உயரும்.)

ஜெபத்தைக் குறித்து ஒரேயொரு காரியத்தை மாத்திரம் சொல்லுங்கள் என்று யாரேனும் என்னைக் கேட்டால், என்னுடைய பதில்: ‘‘ஜெபம் என்பது நாம் நினைப்பதைக்காட்டிலும் இலகுவானது’’ என்பதே.

சில சமயங்களில் ஜனங்கள், ஜெபத்தை வறட்சியானதாகவும், கடினமானதாகவுமாக்கிவிடுகிறார்கள். மற்றும் சில நேரங்களில், மதசார்புள்ள நமது மனதும், பாரம்பரியங்களும், ஜெபத்தை ஜனங்களுக்கு எட்டாதக் காரியமாக்கிவிட்டது. அநேக ஜனங்கள் இப்படியாக நினைக்கிறார்கள்: ஜெபத்திற்கென்று ஒரு குறிப்பிட்ட சூழ்நிலை வேண்டும், ஒரு குறிப்பிட்ட நிலையில் நம்முடைய சரீரத்தை வைக்கவேண்டும், கண்டிப்பாக சில விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும், குறிப்பிட்ட விதத்தில் ஜெபிக்கவேண்டும் என்று. அது தவறு.

ஜெபம் என்பது தேவனோடு பேசுவது, அவ்வளவுதான். உண்மை என்னவென்றால், நாம் எப்பொழுது வேண்டுமானாலும், எங்கேயிருந்தும் ஜெபிக்கலாம். நம் சிந்தனைகளைக் கர்த்தருக்கு நேராகத் திருப்புவதே அமைதியான ஜெபமாகும்.

தேவன், நீங்கள் வல்லமையாக ஜெபிக்கவும், உங்கள் ஜெப ஜீவிதம் பரிபூரணமாக இருக்கவும் விரும்புகிறார். ஜெபம் என்பது வல்லமையுள்ளது என்பதையும், அந்த வல்லமை உங்கள் வாழ்க்கையில் வெளிப்பட நீங்கள் விரும்புகிறீர்கள் என்பதையும் நான் அறிவேன்.

ஜெபத்தின் மிகப்பெரிய இரகசியம் என்னவென்றால், ஜெபம், நமது இருதயத்தைப் பரலோகத்திலிருக்கிற தேவனுடைய இருதயத்தோடு இணைக்கிறது. ஜெபம் என்பது ஆவிக்குரியக் காரியமாகும். அது நமது கண்களால் காணமுடியாத ஒரு உலகத்திற்குள் செல்கிறது. அந்த உலகத்திலிருந்து காரியங்களை, நாம் காணும், வாழும் இந்த உலகத்திற்குக் கொண்டு வருகிறது. ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை நமது இயற்கையான, இந்த அனுதின வாழ்க்கைக்குக் கொண்டு வருகிறது. இந்த பூமிக்குரியக் காரியங்களை மேற்கொள்ளத் தக்க ஆவிக்குரிய பெலனையும் கொண்டு வருகிறது.எல்லா சிருஷ்டிகளிலும் மனிதர்களாகிய நாம் மாத்திரமே இந்த இரண்டு உலகங்களிலும் இருக்கிறோம்.

தேவன் ஆவிக்குரியக் காரியங்களை பூமியிலுள்ள நமக்குக் கொண்டு வருவது ஜெபத்தின் மூலமே. நாம் ஜெபிக்காவிட்டால் இவற்றைப் பெற்றுக் கொள்ளவே முடியாது. தேவன் வைத்திருக்கிற கண்களால் காணாத, காதுகளால் கேட்காத, உன்னதத்திலிருக்கிற அநேக ஆசீர்வாதங்களை நாம் ஜெபத்தின் மூலமே பெற்றுக் கொள்ள முடியும். தேவனிடத்திலிருந்து நாம் எதையும் ஜெபத்தின் மூலமே கேட்டுப் பெறவேண்டும் என்பது தேவனுடைய பிரமாணம். அதற்கு அவரும் உட்பட்டிருக்கிறார்.




உங்களது ஜெப வாழ்க்கை உங்களுக் குத் திருப்தியாய் இருக்கிறதா? இன்று அநேகருடைய பதில் ‘‘இல்லை’’ என்பதுதான். கர்த்தர், அவர்களுடைய ஜெபத்தைக் கேட்கிறார் என்ற நிச்சயம் அவர்களுக்கு இல்லை. சரியாக ஜெபிக்கிறார்களா? போதுமான அளவிற்கு ஜெபிக்கிறார்களா? என்று அவர்களுக்கு தெரியவில்லை.

மிக முக்கியமான, வாழ்க்கையையே மாற்றக்கூடிய ஒரு ஜெபம் எது வென்றால், ‘‘ஜெபிக்கக் கற்றுத் தாரும், கர்த்தாவே’’ என்பதுதான்.

கர்த்தர், ஒவ்வொருவரையும் ஒவ்வொரு விதத்திலே நடத்துவார். மற்றவர்களைப் போல நான் ஜெபிக்க முற்பட்டபொழுது இதை கர்த்தர் கற்றுக் கொடுத்தார்.

இயேசுவிடம், சீஷர்கள் ஜெபிக்கக் கற்றுக் கொடுக்கச் சொன்னதுபோல, நானும் எனக்கு ஜெபிக்கக் கற்றுக் கொடுக்கும்படி கர்த்தரிடம் கேட்டேன். எனக்கு பதில் கொடுத்தார். மேலும் எனது ஜெப ஜீவிதத்தில் மாபெரும் முன்னேற்றத்தைத் தந்தார்.

மாம்சத்திலிருந்து (மனதிலிருந்து, உணர்ச்சிமேலிட, இஷ்டம்போல) ஜெபிப்பதிலிருந்து, ஆவியில் நிறைந்து, பரிசுத்த ஆவியானவரால் உந்தப்பட்டு, விசுவாசத்தின் அடிப்படையில் ஜெபிக்கும் நிலைக்கு உயர்ந்தேன்.

எனது வெளிப்புற மனுஷிக்காக நான் ஜெபிப்பதில்லை (சூழ்நிலை, நான் கற்றுக் கொள்ளும் காரியங்கள், என்னைச் சுற்றி நடக்கும் காரியங்கள்). இப்பொழுது நான் எனது உள்ளார்ந்த மனுஷிக்காகவே ஜெபிக்கிறேன் (சீரான இருதயத்திற்காக, ஆவிக்குரிய வளர்ச்சிக்காக, எனது நோக்கங்களுக்காக, எனது குறிக்கோளுக்காக).

ஒவ்வொரு நாளும் செய்யும் ஐந்து நிமிட ஜெபத்திற்குப் பதிலாக, நாள் முழுதும் ஜெபிக்கும் பழக்கத்திற்கு வந்துள்ளேன்.

ஒழுங்கீனமான ஜெப ஜீவிதத்திலிருந்து, குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கி ஜெபிக்கும் ஒழுங்கிற்கு வந்துள்ளேன்.

கர்த்தருக்காக நான் செய்யும் காரியம் ஜெபம் என்பதுபோய், ஜெபம் என்பது ஒரு வேலை அல்ல, அது பெரிய சிலாக்கியம் என்ற நிலைக்கு வந்துள்ளேன்.

பயத்தோடு அவரை நோக்கி ஜெபித்தது போய் தைரியமாக அவரை அணுகுகிறேன் (அவருடைய வார்த்தை சொல்வதுபோல) ஒரு பெரிய எதிர்பார்ப்புடன்.

வேறொருவர் போல ஜெபிக்க முற்படாதீர்கள். நீங்களாகவே ஜெபியுங்கள். இயேசு கிறிஸ்துவே உங்களுக்கு முன்னுதாரணமாக இருக்கட்டும். நல்ல விஷயங்களை மற்றவர்களிடமிருந்து கற்றுக்கொள்வதில் தவறில்லை. ஆனால், அவர்களைப் போலவே செய்யக்கூடாது.

ஒரே மாதிரியான ஜெபத்தை செய்யாதிருங்கள். வெவ்வேறு விதத்தில் ஜெபியுங்கள். அது உங்களுக்கு சந்தோஷத்தை தரும்.

வல்லமையாக ஜெபிப்பதின் அடையாளம், தேவனை ஜெபத்தில் ஒரு நண்பனைப்போல அணுகுவதாகும். அப்படி தேவனை ஒரு நண்பனைப் போல அணுகும்போது, நமது ஜெபம், புத்துணர்வுடனும், உற்சாகத்துடனும், கர்த்தரோடுகூட உள்ள மிக நெருங்கிய ஐக்கியத்துடனும் இருக்கும்.

இவையெல்லாம் உங்களுக்கு வேண்டுமென்றால், நீங்கள் கர்த்தருடனுள்ள உறவில் அதிக நேரத்தை முதலீடு செய்யுங்கள். உங்களுடைய

சிந்தனையில் கர்த்தரையும் ஈடுபடுத்துங்கள். உங்களுடைய உரையாடல்களில் அவரையும் சேர்த்துக் கொள்ளுங்கள். உங்களுடைய ஒவ்வொரு அனுதின நடவடிக்கைகளிலும் அவரை இணைத்துக் கொள்ளுங்கள். அவர் உங்களுடைய வாழ்க்கையில் பங்கு கொள்ள அதிக விருப்பமுள்ளவராயிருக்கிறார். உங்களது வாழ்க்கையின் எல்லா பகுதியிலும் அவர் இடைபட விரும்புகிறார். உங்களுடைய நண்பராக இருக்க விரும்புகிறார்.

ஆபிரகாமை தன்னுடைய நண்பன் என்று சொல்லுகிறார் (யாக்கோபு 2:23, ஏசாயா 41:8, 2 நாளாகமம் 20:7). அப்படிப்பட்ட உறவில் இருந்ததால்தான் அவன் கர்த்தரிடம் மற்றவர்களுக்காகத் தைரியமாகப் பரிந்து பேசுகிறான். அவனிடம் சொல்லாமல் எதையும் செய்யமாட்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். ஆபிரகாமிடம் பகிர்ந்து கொண்டதுபோலக் கர்த்தர் உங்களிடமும் தம்முடைய வாஞ்சைகளை, நோக்கங்களை தரிசனங்களை பகிர்ந்து கொள்வார். அதற்கு நீங்கள் அவரோடு நண்பனைப்போல உறவில் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட நண்பன் என்ற உறவில் ஆழமாகச் செல்ல நீங்கள் செய்யவேண்டிய சிறந்த காரியங்களில் ஒன்று: கர்த்தருக்குக் கீழ்ப்படிய விரும்பும் இருதயம். நம்முடைய இருதயம் பரிசுத்தமாக இருக்கும்போது, அவருடைய நடத்துதலுக்கு இலகுவாக இருக்கும் போது, அவருக்குக் கீழ்ப்படிய ஆர்வமாக இருக்கும்போது, கர்த்தருடைய நண்பன் என்ற சரியான ஸ்தானத்திற்கு வந்துவிடுகிறோம். நாம் மனமுவந்து நம்முடைய வாஞ்சைகளுக்கு மேலாக அவருடைய வாஞ்சைகளை வைப்போம். ஏனென்றால் நாம் அவரை நேசிக்கிறோம்; அவரை முற்றிலுமாக நம்முடைய நண்பன் என்பதால் நம்புகிறோம். அவருடைய வாஞ்சை நமக்காகவே என்பதை அறிந்து கொள்கிறோம்.

அவருடைய நட்பில் வளரும்போது, நமது உறவு அவர் யாராக இருக்கிறார் என்பதனை அடிப்படையாகக் கொண்டு இருக்க வேண்டுமேயொழிய, அவர் நமக்கு என்ன செய்வார் என்பதனை வைத்து இருக்கக்கூடாது என்பதை ஒருபோதும் மறந்து விடாதிருங்கள். அவருடைய பிரசன்னத்தைத் தேடுங்கள், அவர் தரும் வெகுமதிகளை அல்ல. அவருடைய முகத்தைத் தேடுங்கள், அவருடைய கரத்தை அல்ல.

நம்மை அளவில்லாமல் ஆசீர்வதிக்க விரும்புகிறார் (மல்கியா 3:10). ஏதோ பேருக்கு ஜெபிக்க வேண்டுமே என்று ஜெபிப்பீர்களானால், உடன் அதை நிறுத்துங்கள், கர்த்தருக்கு அப்படிப்பட்ட ஜெபத்தைக் கேட்க விருப்பமில்லை. கர்த்தர், தைரியமாக நம்பிக்கையோடு, விசுவாசத்தோடு ஏறெடுக்கும் ஜெபத்தையேக் கேட்க விரும்புகிறார்.

எப்பொழுதும் பயபக்தியோடு அவரை அணுகுங்கள். ஆனால், பயப்படாதீர்கள்.

கர்த்தரோடு நாம் நண்பர்களாக இருப்பது நமக்கும் மற்றவர்களுக்கும் பிரயோஜனமானதாகும். மற்ற ஜனங்கள் நம்மை அவர்களுடைய தேவைகளுக்காக சந்திக்கும்போது அவற்றையெல்லாம் கொடுக்க நம்மிடம் வசதி இருக்காது. ஆனால், நாம் அவர்களுக்காகக் கர்த்தரிடம் ஜெபித்தோமானால், கர்த்தர் அவற்றையெல்லாம் அவர்களுக்குக் கொடுப்பார்.

எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது, என்னுடைய தகப்பனாருடைய ஆவிக்குரிய ஜீவிதம் எனக்கு மிகுந்த வருத்தத்தை தந்தது. நான் சிறு பிள்ளையாய் இருந்தபோது என்னை மிகவும் கடினமாக நடத்தினார். அவரை நான் வெறுத்தேன். அவருக்காக நான் ஜெபிப்பது என்பது நான் செய்யும் காரியங்களிலேயே கடைசியானக் காரியமாகும். கர்த்தரோடு நான் நெருங்கிவந்து அவருடைய வழிகளை அறிந்துகொண்டபோது, என் தகப்பனாரை நான் முற்றிலுமாக மன்னிக்க வேண்டும் என்பதையும், அவருடைய இரட்சிப்புக்காக நான் ஜெபிக்க வேண்டுமென்பதையும் உணர்ந்து



கொண்டேன். கர்த்தர், என்னுடைய தகப்பனாரை நான் மன்னிக்கவும், அவர்மேல் இரக்கப்படவும் கிருபை செய்தார். ஆனால், பல வருடங்களாக நான் என்னுடைய தகப்பனாருக்காக ஜெபித்தும் அவர் இரட்சிக்கப்படவே இல்லை. அவர் அதே கடின இருதயத்தோடுதான் இருந்தார். கர்த்தர், நாங்கள் வசிக்கும் இடத்திற்கு பக்கத்திலேயே என்னுடைய பெற்றோரைக் கொண்டு வந்து குடியேற்றும்படி சொன்னார். உடன் கர்த்தருக்கும் கீழ்ப்படிந்தேன். சில சமயங்களில் என்னுடைய தகப்பனாருக்காக நான் ஜெபிக்க மறந்துவிடுவேன். அப்போதெல்லாம் கர்த்தர் அதை என் ஞாபகத்திற்குக் கொண்டு வந்து ஜெபிக்க வைப்பார். சில வருடங்கள் கடந்தது. ஒரு நாள், என் தாயார் என்னை அழைத்து, என்னுடைய தகப்பனார் தொடர்ந்து மூன்று நாட்களாக அழுதுகொண்டே இருப்பதாகச் சொன்னார்கள். நான் சென்று பார்த்தபொழுது என்னுடைய தகப்பனார், என் இளமைப் பிராயத்தில் என்னைக் கடினமாக நடத்தினதற்காக மன்னிப்பு கேட்டார். இயேசு கிறிஸ்துவை தம் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, ஞானஸ்நானம் எடுத்தார். சில நாட்களில் இறந்து விட்டார். ஆனால், இன்று அவர் கர்த்தரோடு பரலோகத்தில் இருப்பார் என்று நாங்கள் சந்தோஷப்படுகிறோம். நம்முடைய ஜெபம் வல்லமையுள்ளது என்பதில் எப்போதும் சந்தேகம் கொள்ளாதீர்கள். கர்த்தரோடு நீங்கள் கொண்டுள்ள நட்பு, நீங்கள் அன்பு செலுத்தும் ஒருவரின் வாழ்க்கையில் நித்தியமான மாற்றத்தைக் கொண்டு வரும்.

மற்ற மனிதர்களை நம்முடைய கட்டுப்பாட்டில் வைக்கமுடியாது. ஆனால், அவர்களுக்காக நாம் கர்த்தரைத் தைரியமாக அணுகும்போது, கர்த்தர் அவர்களுடைய வாழ்க்கையில் பலமாகக் கிரியை செய்ய வாசலைத் திறக்கிறோம்.

கர்த்தர், நம்முடைய ஜெபம் எளிமையாக இருக்கவே விரும்புகிறார். நம்மோடு நட்பு கொள்ள விரும்பும் அவர் ஜெபத்தைக் கடினமானதாக்குவாரா?

> “ஜெபம் என்பது நாம் நினைப்பதைக் காட்டிலும் இலகுவானது”

ஆனால், சாத்தான், நம்மை ஜெபிக்க விடாமல் தடுக்க முயற்சிக்கிறான். நாம் ஜெபிக்கும் போது, பல விதிமுறைகளைக் கடைபிடிக்க வேண்டும், நம் சரீரத்தை இப்படியாக ஒரு குறிப்பிட்ட நிலையில் வைக்கவேண்டும், நீண்ட நேரம் ஜெபிக்க வேண்டும், அப்போதுதான் நம்முடைய ஜெபத்தைக் கர்த்தர் கேட்பார் என்று நம் மனதில் தவறான சிந்தனை களைத் தந்து, ஜெபத்தின்மீது நமக்கு அவநம்பிக்கை யைத் தருகிறான். ஜெபம் என்பது நமக்கு இலகுவானது, எளிமை யானது என்பதை சாத்தான் நன்கு அறிவான். ஜெபம், நம்மை தேவனோடு இணைக்கிறது என்பதை அவன் நன்கு அறிவான். இன்று அநேகர் தங்களுடைய ஜெபத்தில் நம்பிக்கை இல்லாமலும் அதிருப்தியோடு இருக்கிறார்கள். விசுவாசத்தோடு ஏறெடுக்கும் ஜெபத்திற்கேக் கர்த்தர் பதில் கொடுப்பார்.

ஜெபம் என்பது சுருக்கமாகவும் அதே சமயம் வல்லமையுள்ளதாகவும் இருக்கவேண்டும். ஒரு நாளில் குறிப்பிட்ட நேரம் ஒதுக்கி ஜெபியுங்கள். அத்துடன் விட்டுவிடாமல், நாள்முழுக்க அவ்வப்போது நேரம் கிடைக்கும்போதெல்லாம் கர்த்தரோடு பேசிக் கொண்டே இருங்கள். சில சமயங்களில், நாம் சில காரியங்களுக்காக அதிக நேரம் ஜெபிக்க வேண்டியதிருக்கும். அப்போதுதான் நம் இருதயத்தின் பாரம் குறையும். மற்றும் சில சமயங்களில் நாம் போராடி ஜெபித்து சில காரியங்களை மேற்கொள்ள வேண்டியிருக்கும். அப்படிச் செய்ய மறவாதிருங்கள்.

- தொடரும்.